**வாக்குமூலம்**
**10 வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றம், எழும்பூர், சென்னை 08.**
**வழக்கு எண் 337/2022**
**அ.சா. 1**

பெயர் : திரு. ரேவதி வயது :

கணவர் பெயர்: முகவரி :

தொழில் :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of December 2024.

Signature of Witness

**Name of the Bench Clerk** : Tr. Veerapathiran

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of December 2024.

Signature of Bench Clerk

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை**
**முதல் விசாரணை**

நான் தற்போது கொடுங்கையூர், அம்பேத்கார் தெருவில் வசித்து வருகிறேன். நான் காவல் துறையில் பணிபுரிந்து வருகிறேன். எதிரியை காவல் நிலையத்தில் வைத்து பார்த்துள்ளேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் ஞாபகமில்லை, நான் எப்போதும் போல் வீட்டை பூட்டிவிட்டு டிரான்ஸ்போர்ட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டேன். மாலை சுமார் 6 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்தபோது நான் பூட்டியிருந்த கதவு உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது வீட்டில் உள்ள பீரோ கதவு உடைக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டிருந்த பிரேஸ்லட், செயின், கம்மல், மோதிரம் மொத்தம் 9 சவரன் காணாமல் போயிருந்தது. அன்றைய தினமே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். பின்னர் புகார் கொடுத்து 2 மாதத்திற்குள்ளாக காணாமல் போன நகையில் பாதி கிடைத்துவிட்டதாக போலீஸார் தகவல் சொன்னார்கள், நான் காவல் நிலையம் சென்று பார்த்தபோது அங்கிருந்த எதிரி தமிம் அன்சாரி என்பவர் தான் என் வீட்டில் நகை திருடிய நபர் என சொன்னார்கள். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த எனது நகைகளை மனு செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த **புகார் அதசாஆ 1** ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 2 செயின்கள் மற்றும் கம்மல் ஆகியற்றை தான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச்சென்றேன். அவை **சா.பொ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எதிரியின் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை

"Taken down by me/before me in open Court,
interpreted/read over to the witness and
admitted by the deponent to be correct"

Sd/ P. Revathi
X Metropolitan Magistrate,
Egmore, Chennai 08.

// True copy //